# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி -26 | 13-10-2003 | திங்கட்கிழமை | ஓசை 237



தொழில் நுட்பத்தில் ஒருமனி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.

யாழ் சாலை, (ஏ-8628) கிளிநொச்சி.


## ஊடகவியலாளர் மீதான தாக்குதலை கண்டித்து க.கா.கு. அலுவலகம் முன்மறியல்

நேற்று முன்தினம் யாழ்.கண்டி வீதியின் அரியாலை மாம்பழம் சந்தியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நல்லூர் கோவில் வீதியிலுள்ள அலுவலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டத்தினை மேற்கொண்டனர். காலை பத்து மணியளவில் நல்லூர் கோவில் வீதியை வழிமறித்து கண்காணிப்புக் குழுவின் பிரதான வாயிலில் கூடிய பத்திரிகையாளர்கள் சுமார் ஒரு மணித்தியாலம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் அங்கு வருகைதந்த கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் மேற்படி போராட்டத்தில்

(8.ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலிஸ் அத்தியட்சகர், படைத் தளபதியை மாற்றுக

### ஊடகவியலாளர் மகஜர்

அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று செய்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்தின் போது. யாழ். செய்தியாளர்கள் படையினரால் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் தாக்கப்படுவதைக் கண்டிக்கும் சுலோகங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

யாழ்.பிரதேச செய்தியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு

(8.ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் தோட்டத்தொழிலாளர்கள் ஒன்றியம் என்ற பெயரில் போட்டியிட தொழிற்சங்கங்கள் சில தீர்மானித்துள்ளன.

இரண்டு பெரும் கட்சிகளுடனும் இணைந்து போட்டியிட்டு கிடைத்துள்ள ஏமாற்றங்களையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனும், ஐக்கிய தேசியக்கட்சியுடனும்

(8.ஆம் பக்கம் பார்க்க)

# அரியாலைப்பகுதியில் அப்பாவி மக்கள் மீது சிறில.படையினர் கடும் தாக்குதல்

## வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி பத்துப் பேர் பொலிசாரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ். அரியாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியால் சென்ற பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தியதுடன் 10 பேர் மீது கடும் தாக்குதலை நடத்தியபின் சிறிலங்காப்பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். பல்வேறு தேவைகளுக்காக வேறிடங்களுக்குச் சென்றுவிட்டு அரியாலைப்பகுதியிலுள்ள தமது வீடுகளுக்குத் திரும்பிய போதே இவர்கள் தாக்கப்பட்டனர்.**

இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது,யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தைத்தொடர்ந்து அப்பகுதியில் தங்களது வீடுகளுக்குத் திரும்பிக்கொண்டிருந்த மக்களை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர்.

இதன்போது 10 பேர் படையினராலும் அப்பகுதியில் நின்ற, பொலிசாராலும் கைது செய்யப்பட்டு மோசமாக தாக்கப்பட்டுள்ளதுடன் இச் சம்பவத்தின்போது இவர்கள் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டு யாழ். பொலிசாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்று பொலிஸ்பாதுகாப்புடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இச் சம்பவத்தில் காயமடைந்து பொலிஸ் பாதுகாப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராமநாதன் ராம்தீஸன் (வயது-24) அரியாலையைச் சேர்ந்தவர்

(8.ஆம் பக்கம் பார்க்க)

- வரவு செலவுத்திட்டம் நிறைவேறும் வரை -

## ஆளுங்கட்சிப் பா.உ.கள் வெளிநாடு செல்லத்தடை

பாராளுமன்றத்தின் வரவு செலவுத் திட்டம் நிறைவேறும் வரை ஐக்கிய தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் வெளிநாடு செல்வதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தடை விதித்துள்ளார். இம்முறை பாராளுமன்றத்தின் வரவு செலவுத்துண்டு விழும் தொகையின் குறையை நிரப்புவதற்கு 31,250 கோடி ரூபா தேவைப்படுகின்றது. வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சு.க.வின் போராட்டங்களில் பங்கேற்பதில்லை என ஜே.வி.பி.முடிவு

சிறிலங்காசுதந்திரக்கட்சி ஏற்பாடு செய்துவரும் அரச எதிர்ப்புப் பேரணிகளில் இணைந்து கொள்வதில்லை என ஜே.வி.பி.முடிவு செய்துள்ளது.

தாம் கொழும்பில் நடத்தும் பேரணிகளில் ஜே.வி.பி.யினரும் இணைந்து கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுமாறு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிறிலங்கா சுதந்திரக்கட்சிச் செயலாளர் மைத்திரி பால சிறிசேனவைப் பணித்திருந்தார்.

முன்னதாக கொழும்புப் பேரணியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தனிப்பட்ட போராட்டமாக நடத்த சந்திரிகா குமாரதுங்க திட்ட

(8.ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகையாளரையோ, மக்களையோ தாக்குவதால் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முடியாது

### சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை

(யாழ்ப்பாணம்)

இராணுவ வெறியர்கள் நினைப்பது போன்று பத்திரிகையாளர்களையோ மக்களையோ தாக்குவதனூடாக மக்களின் விடுதலை உணர்வெழுச்சியை மழுங்கடிக்க முடியாது என சிறிலங்காப் படையினரால் பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களைத் கண்டித்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்றுமுன்தினம் மாலை அரியாலை மாம்பழம் சந்தியில் ராணுவ வாகனம் முச்சக்கரவண்டியுடன் மோதியதைத்தொடர்ந்து அப்பகுதி மக்கள் இவ்வாறான விபத்துக்களை ராணுவம் திட்டமிட்டே மேற்கொண்டு வருகின்றது என்பதை உணர்ந்து கொண்டு அந்த ராணுவ கொலை வெறியாட்டத்துக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தபோது ராணுவம் தனது கொலைப்பசியை மக்கள் மீதுதீர்க்க எண்ணி துப்பாக்கிப்பிரயோகம், கண்ணீர் புகைக்குண்டு வீச்சு முற்றும் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டது. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்ற பத்திரிகையாளர்களை பத்திரிகையாளர் என இனம் கண்டபோதிலும் கடுமையாகத்தாக்கியதுடன்அவர்கள் கொண்டு சென்ற புகைப்படக் கருவியைப் பறித்தெடுத்தது.

(8.ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை திரியாயில் - த.பு.க.உதவியுடன் அமைத்த 10 வீடுகள் திறந்து வைப்பு

- திருமலை திரியாயில் -

(திருமலை)

அமெரிக்காவின் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதியுதவியுடன் திரியாய் பகுதியில் அமைக்கப்பட்ட பத்து வீடுகள்நேற்றுக்காலை திறந்து வைக்கப்பட்டு உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

பெயர்ப்பலகையை தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் திரைநீக்கம் செய்து வைத்தார். முதலாவது வீட்டை திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழர் புனர்வாழ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

முல்லை மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றின்போது போராளி ஒருவர் சாவடைந்தார். 2ஆம் லெப். ஆழிவேந்தன் (கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் கோதாண்ட நொச்சிக்குளம் சாத்திரி

(8.ஆம் பக்கம் பார்க்க)

## பொலிசாரோ, இராணுவத்தினரோ யாழ். பல்கலை வளாகத்துள் வரக்கூடாது

### பல்கலை. மாணவர் ஒன்றியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப் பொலிசாரோ, ராணுவத்தினரோ நேற்றுமுதல் பல்கலைக்கழகத்துக்குள் நுழையக் கூடாது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

நேற்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றுக்கு வருகைதந்த சிங்கள அதிகாரிக்குப் பாதுகாப்பு வழங்கவென பொலிசார் வாகனத்தில் வந்திருந்தனர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்களுக்கும் சிறிலங்காப் பொலிசாருக்கும் இடையில் பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெற்ற முரண்பாடுகளையடுத்து இனிவரும் நாட்களில் பொலிசாரோ, ராணுவத்தினரோ பல்கலைக்கழகத்திற்குள் நுழையக் கூடாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

## சங்கிலித் தாக்கத் தொடராக படை உயரதிகாரிகளின் சேவை நீடிப்பு

இராணுவ உயர் அதிகாரிகளின் பதவி நீடிப்பு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கையினால் சங்கிலித்தாக்கத் தொடராக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவின் பதவிக்காலம் இவ்வருடத்துடன்முடிவடையவிருந்தது. இதனை சனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான சந்திரிகா குமாரதுங்க அடுத்த வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை நீடித்துள்ளார்.,

இதன் எதிர் நடவடிக்கையாக அடுத்த நிலையிலுள்ள மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனவின் பதவிக் காலத்தையும் நீடிக்கத்தக்க வகையில் பாதுகாப்பு

(8.ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வீதிஒழுங்கு நூல்

ஓட்டுநர் அனுமதி பெறுவதற்கு வீதி ஒழுங்கு நூல் 45/- சகல ஈழத்து வெளியீடுகளும் இந்திய அறிவியல் நூல்கள், குழந்தைகளுக்கான நூல்கள், தேவநேயப்பாலவணின் நூல்கள் அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சியில் பெற்றுக் கொள்ளலாம். (3841)

## தவறிவிட்டது

தியாகு-கணேஷ்ராஜ் என்பவரது பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் 06.10.2003 ஆம் திகதியன்று பரந்தனுக்கும், முகமாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருகிலுள்ள காவல்துறைப் பணிமனையிலோ அல்லது புத்தடி, விசுவமடு என்னும் அவரது சொந்த முகவரிக்கோ தகவல் தரவும். T.P -021-226-3685. (3843)

## MD-90 விற்பனைக்குண்டு

பாவித்த MD-90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. விலை 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவை. தொடர்பு: அறிவமுது பொத்தகசாலை, கிளிநொச்சி. (3844)

## காணி விற்பனை

மாங்குளம் சந்திக்கு அருகாமையில் உள்ள குடியிருப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.சின்னத்தம்பி, 2ஆம் கண்டம், இடதுகரை, முத்துஐயன்கட்டு. (3837)

# தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும்

### - மன்னார் பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழு அறிக்கை

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகுமென மன்னாரில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் தொடர்பாக அதன் ஏற்பாட்டுக்குழுவினர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: போரில்லாது உயிர், உடமைகளை இழக்காது உரிமைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் இதுவென மன்னார் பொங்குதமிழ் சமூகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 3.00 மணியளவில் மூன்று இடங்களிலிருந்து ஆரம்பமாகும் பேரணிகள் மன்னார் பொது விளையாட்டரங்கைச் சென்றடைந்தவுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

# துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய்

## களஞ்சிய முகாமையாளர் பயிலுனர் ஆட்சேர்ப்பு

முல்லைத்தீவு மேற்குப் பிரிவில் 02 வருடங்களுக்கு மேலாக நிரந்தரமாக வசிக்கும் 18-45 வயதிற்கு இடைப்பட்ட ஆண்பாலாரிடமிருந்து களஞ்சிய முகாமையாளர் பயிலுனர்களாக நாளொன்றுக்கு 100/- விற்கு மேற்படாதபடி சம்பளம் வழங்கக்கூடியதாக தற்காலிக ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பத்தை சுயமாகத் தயாரித்து 28.10.2003ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பிந்தாமல் கிடைக்க கூடியதாக தலைவர், துணுக்காய் பகுதி ப.நோ.கூ.சங்கம், துணுக்காய் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**பதவி :-** களஞ்சிய முகாமையாளர் (பயிலுனர் தற்காலிகம்)

**குறியீட்டு இலக்கம்:-** 208/14

**கல்வித்தகைமை:-**

க.பொ.த.சாதாரண தரத்தில் இரு அமர்விற்கு மேற்படாமல் கணிதம், தமிழ்மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப்பயிற்சி நெறியில் சித்தி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

தலைவர்,
துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்கம்,
துணுக்காய்.

(சி-8650)

## - குரங்குபாஞ்சான் முகாமை அகற்றக்கோரி -

# கந்தளாயிலிருந்து சிஹல உறுமய ஊர்வலம் நடத்த ஏற்பாடு

திருகோணமலை குரங்குபாஞ்சான் முகாமை அகற்றுமாறு கோரி சிஹல உறுமயக்கட்சி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளது.

குரங்குபாஞ்சான் பிரதேசத்திலிருந்து புலிகள் வெளியேற வேண்டுமெனக் கோரி கந்தளாயிலிருந்து குரங்குபாஞ்சான் வரை பேரணியை நடத்துவதற்கு சிஹல உறுமயக்கட்சி தீர்மானித்துள்ளது. "ஆயுதம் உங்களுடையது பூமி எங்களுடையது" என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கலந்து கொள்ளவுள்ள தமது கட்சி உறுப்பினர்களுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக இக்கட்சியின் தலைவர் திலக் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

# தொழில்நுட்ப கற்கைகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு 2002ஆம் ஆண்டு அல்லது அதற்கு முதல் க.பொ.த. (உ/த)இல் சித்தியடைந்த, தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (H.N.D.A), உயர் தேசிய முகாமைத்தவ டிப்ளோமா (H.N.D.M), தேசிய ஆங்கில டிப்ளோமா (N.D.E), தேசிய வியாபாரக் கல்வி (N.D.B.S) ஆகிய கற்கை நெறிகள் தொடர விரும்புவோர் இல.78, பலாலி வீதியில் உள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் விண்ணப்பப்படிவங்களை 13-10-2003இல் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. விண்ணப்ப முடிவுத்திகதி 10-11-2003 என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் முறைமாற்றம் குறித்து கட்சிகள் ஆர்வம் காட்டவில்லை

## தெரிவுக்குழுத் தலைவர் தெரிவிப்பு

தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பதில் கட்சிகள் பெருமளவில் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தெரிவுக்குழுவுக்குத் தலைமை தாங்கும் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், செப்ரெம்பர் 29ஆம் திகதிக்குள் தேர்தல் முறை மாற்றம் தொடர்பான தமது கருத்துக்களைத் தெரிவிக்குமாறு 51 பதிவு செய்யப்பட்ட கட்சிகளுக்குக் கடிதங்கள் அனுப்பியும் முக்கிய கட்சிகள் கூட தமது கருத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

எதிர்வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்குள் தெரிவுக் குழு தனது அறிக்கையைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் ஒருசில அமைப்புகளிடம் மட்டுமே தெரிவுக்குழு கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது.

தேர்தல் ஆணையாளர், ஆட்பதிவுத் திணைக்களம், தேர்தல் கண்காணிப்புக்குழு ஆகியவற்றின் ஆலோசனைகளே பெறப்பட்டுள்ளன. சுயாதீனமான அமைதியான தேர்தல் நடத்துவதற்கு ஆலோசனை தெரிவித்தும் தேர்தல் விதிகள் தொடர்பாகவும் 80 பக்கங்கள் கொண்ட ஆவணமொன்றைச் சமர்ப்பித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதேச சபைத் தேர்தல்கள் குறித்த காலத்தில் நடைபெறும்

பிரதேச சபைகளில் தேர்தல்கள் அடுத்த வருடம் குறிப்பிட்ட திகதியில் நடைபெறும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.யினருக்கும் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகப் போகிறது எனவும் இதற்கு திகதி நிர்ணயிக்கப்படவில்லை என சனாதிபதி அக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

# பணிநிலை வெற்றிடம்

"மௌவல் குழுமம்" (தனியார்) வரையறுக்கப்பட்ட (MOUVAL GROUP (PVT) LTD) நிறுவனத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைகளிற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன

**01. பணிநிலை:-** இயந்திரவியல் முகாரி (MECHANICAL FOREMAN)

**தகைமை:-** அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரவியல் (MOTOR MECHANISM) கற்கை நெறியைக் கற்றுத் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

**பட்டறிவு:-** 03 ஆண்டுகள் இயந்திரவியல் முகாரி (MECHANICAL FOREMAN) பட்டறிவு உட்பட 10 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை இயந்திரவியல் (MECHANISM) துறையில் பெற்றிருக்க வேண்டும்.

**அகவை:-** 50 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**02. பணிநிலை:-** உற்பத்தி முகாமையாளர்

**தகைமை:-** அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தொழில் நிர்வாகமாணி (முகாமைத்துவம்) கற்கை நெறியை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

**பட்டறிவு:-** 03 ஆண்டுகளிற்குக் குறையாத பட்டறிவினை உற்பத்தித் துறையில் பெற்றிருக்க வேண்டும்.

**அகவை:-** 35 ஆண்டுகளிற்கு மேற்படலாகாது.

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பதாரர்கள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட தன் விபரக்கோவை [சுயவிபரம்] உடனும், தேவையான சான்றிதழ்களுடனும், இரண்டு [02] நற்சான்றிதழ்களுடனும் வரும் 2003 ஒக்டோபர் 25 ஆம் நாள் பணிநிலை 01 இற்கு உரியவர்கள் காலை 10.00 மணிக்கும், பணிநிலை 02 இற்கு உரியவர்கள் மதியம் 2.00 மணிக்கும் கந்தசாமி கோவிலடி, யாழ்.சாலை, கிளிநொச்சியில் அமைந்திருக்கும் "மௌவல் குழுமம" [தனியார்] வரையறுக்கப்பட்ட (MOUVAL GROUP (PVT) LTD) நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர்.**

முகாமை பணிப்பாளர்,
மௌவல் குழுமம் (தனியார்) வரையறுக்கப்பட்டது,
கிளிநொச்சி.

(சி-8651)







அமெரிக்க சனாதிபதி புஷ்சின் விஜயத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக மணிலாவில் அவரது உருவப்படத்தை ஏந்தியும் மரக்கறிவகைகளை அதன் மீது எறிந்தும் ஆர்ப்பாட்டம் நடத்தும் பிலிப்பைன்ஸ் வாசிகள்.

# யுத்தம் மூலம் சாதிக்க முடியாது ஈராக் நிலவரமே சான்றாகும்

யுத்தங்கள் மூலம் எதனையும் சாதித்து விடமுடியாது என்பதை ஈராக்கில் இடம் பெற்று வரும் தொடர்ச்சியான வன்முறையும் பதற்ற நிலையும் எடுத்துக்காட்டுவதாக பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கென கேந்திரமானதும் இறையாண்மையும் உறுதிப்படுத்துவதுமான ஆட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என வத்திக்கான் இராஜாங்க செயலாளர் கூறியுள்ளார். ஈராக்கில் இடம் பெற்று வரும் பிரச்சினைகளைத் தடுப்பதற்கு வத்திக்கான் தலையிடாத போதிலும் அங்கு இடம் பெற்று வரும் யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு சகல உரிமைகளும் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவ் பிரச்சினைக்கு வேறு வழிகளில் குறிப்பாக அமைதியான வழிகளில் தீர்வு காண தற்கால சமூகம் முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

## 150 பேர் பலி!

நைஜீரியாவின் கிழக்குப் பகுதியில் படகு ஒன்று நீரில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 150 க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

பிரயாணிகளுடன் சீமெந்தையும் வேறு பொருட்களையும் ஏற்றிச் சென்ற இப்படகு பாலம் ஒன்றின் மதில் சுவருடன் மோதி விபத்துக்குள்ளான போது இவ் அனர்த்தம் நேரிட்டது.

# அமெரிக்கப் படையினர் நிலைகொள்வதை ஈராக்கியர்கள் ஒருபோதும் விரும்பவில்லை

## -மலேசிய பிரதமர் அறிவிப்பு

**"அமெரிக்கப் படையினர் ஈராக்கில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதனை ஈராக்கியர்கள் விரும்பவில்லை. இங்கு தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள் இதனையே வெளிப்படுத்துகின்றன" இவ்வாறு மலேசிய பிரதமர் தெரிவித்துள்ளார்**



இஸ்ரேலிய படையினரால் ரடாக்கதிமுகாமில் கொல்லப்பட்ட பலஸ்தீனரின் மரண ஊர்வலத்தில் கோசமிடும் டாலஸ்தீனர்கள்.

சதாமை நாட்டை விட்டு வெளியேற்றிய அமெரிக்கப் படையினர் தற்போது ஈராக்கியர்களால் சுட்டுக் கொல்லப்படுகின்றார்கள் என்று பி.பி.சிக்கு வழங்கிய செவ் வியில் குறிப்பிட்டார்.

அவர் இதுபற்றி மேலும் குறிப்பிடுகையில், அமெரிக்கப்படையினர் தங்களுக்கு விடுதலையளிக்கக் கூடும் என ஈராக்கியர்கள் நம்ப வில்லை.

இவ்வருடம் ஈராக் மீது அமெரிக்கா போர் மேற்கொள்வதாக அறிவித்த பின்னர் இதுவரை அமெரிக்கப் படையினர் ஈராக்கியர்களின் கெரில்லாத் தாக்குதல் முறைகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

ஈராக்கை முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாக அமெரிக்கா அறிவித்த பின்னர் ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படையினர் மீது தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இதில் நூற்றுக்கும் அதிகமான அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

இதேவேளை, மலேசியாவில் எதிர்வரும் 16 ஆம் திகதி உலக இஸ்லாமிய நாடுகளின் மாநாடு ஆரம்பமாகின்றது. இது மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது. 57 இஸ்லாமிய நாடுகள் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்ற போதிலும் 30 நாடுகள் மாநாட்டில் பங்கு கொள்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டில் ஈராக் குறித்த விவகாரங்களே முக்கிய இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிரியாவின் தற்பாதுகாப்பு உரிமை மீறப்பட்டால் இஸ்ரேலுக்குப் பதிலடி வழங்கப்படும்

## -வெளியுறவு அமைச்சு எச்சரிக்கை

(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டினுள் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தினால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று சிரியா அறிவித்துள்ளது.

சிரியா பகுதிகள் மீது கடந்த திங்களன்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு சிரிய ஆட்சியாளர்கள் கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலைப் போன்ற தாக்குதலொன்று இனிமேல் நடைபெறுமானால் தனது தற்காப்பு உரிமையை சிரியா பயன்படுத்துமென வெளியுறவு அமைச்சின் அதிகாரியொருவர் கூறியுள்ளார்

சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ்சில் இஸ்ரேலிய போர் விமானங்கள் நடாத்திய தாக்குதலில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகியிருந்தனர். தீவிரவாதிகளின் பயிற்சிமுகாமையே தாங்கள் தாக்கியதாக இஸ்ரேல் கூறியிருந்தது.

இந்தத் தாக்குதல் சிரியா மீது கடந்த30 வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவெனவும் வர்ணிக்கப்படுகிறது.

# அழகிரியின் பிணையை நீக்க தமிழக அரசு மனுத்தாக்கல்

(சென்னை)

முன்னாள் அமைச்சர் த.கிருட்டிணன் கொலை வழக்கில் மு.க.அழகிரி உட்பட 12 பேருக்கு வழங்கப்பட்ட பிணை மனுவை ரத்துச் செய்யக் கோரித் தமிழக அரசின் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கற்பக விநாயகம் இது தொடர்பாக மு.க.அழகிரி உள்ளிட்டோருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு கூறியுள்ளார்.

# நீர் மூழ்கிகளிலிருந்து அணுவாயுதங்களை அழிக்கும் திறனை இஸ்ரேல் கொண்டுள்ளது

## 'லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்' தகவல்

நீர் மூழ்கிக் கப்பல்களிலிருந்து அணுவாயுதங்களைத் தாக்கக் கூடிய திறனை இஸ்ரேல் கொண்டுள்ளதாக லொஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா,மற்றும் இஸ்ரேல் தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடனேயே இஸ்ரேல் தனது திறமையை அதிகரித்துள்ளதாக அப்பத்திரிகையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளில் அணுவாயுத வல்லமையை இஸ்ரேல் மட்டுமே கொண்டுள்ளதென்றும் இந்நாடு இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டு இருப்பதனால் பிராந்திய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

# தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கைச்சாத்து

இந்தியா-தாய்லாந்தின் இடையே தடையற்ற வர்த்தகத்தை ஏற்படுத்துவதற்காக ஒப்பந்தங்கள் இரு நாட்டுப் பிரதமர்களாலும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தாய்லாந்துப் பிரதமர் தட்சத்தி வைத்ரா செய்தியாளர்களிடையே உரையாற்றும் போது இந்த ஒப்பந்தங்கள் இரு நாட்டு உறவுகளிடையே ஏற்பட்டுள்ள ஒரு மைல்கல் எனக் கூறியுள்ளார்.

பிரதமர் வாஜ்பாயும் தாய்லாந்துப் பிரதமர் தட்சத் திவைத்திராவும் முக்கியமான 05 ஒப்பந்தங்களில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

தமது நாட்டுப் பிரச்சினைகள்,சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி இரு தலைவர்களும் விரிவாக விவாதித்துள்ளார்கள்.



சிக்காக்கோவில் கப்றினிகிறீனில் வறிய குடும்பங்களின் (வரிசெலுத்தாத) குடியிருப்புக்களை வரிசெலுத்துவோர் வாழும் பகுதிக்கு வீடமைப்பு அதிகார சபை மாற்றியதால் அங்கு இடம்பெயர்ந்த மக்கள் குடியேற அஞ்சுகின்றனர். மேற்படி வரி செலுத்துவோர் வாழும்பகுதியே படத்திலுள்ளது.

# உலகின் பல்வேறு விவகாரங்கள் குறித்து இந்தியா-ரஷ்யா கூட்டாக ஆராய்வு

(புதுடில்லி)

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நிலைமை, பேரழிவு ஆயுதங்கள் தீவிரவாதிகளுக்குக் கிடைப்பதால் ஏற்படும் அபாயம் உள்ளிட்ட உலகப் பாதுகாப்பு விடயங்கள் குறித்து இந்திய-ரஷ்யா கூட்டுக்குழு இன்று புதுடில்லியில் விவாதிக்கவுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் இந்தியா சார்பாக வெளியுறவுச் செயலர் கன்பல் சிவலும்,ரஷ்யா சார்பாக அந்நாட்டின் துணை வெளியுறவு அமைச்சர் ரூப்மிக்கோவும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

ரஷ்ய சனாதிபதி விளடிமர் புட்டின் கடந்த டிசம்பர் மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது இரு நாடுகளுக்கிடையேயான கூட்டுப் பணிக்குழு அமைக்கப்பட்டது.



இந்தோனேசியா -பாலித்தீவில் மத வைபவம் ஒன்றில் பாடி ஆடும் பாலிவாசிகள்.

# பத்து இலட்சம் மக்களை கொழும்பில் திரட்டி அரசாங்கத்தை அச்சுறுத்த முயற்சி

"நாங்கள் வேலை நிறுத்தங்கள் செய்கின்றோம். ஜே.வி.பி.யுடன் பாதயாத்திரைகள் செய்கின்றோம்.

அவர்கள் கூட்டிடும் போது அரசிற்கெதிராகக் கோசங்கள் எழுப்புகிறோம். இதனால் ஐக்கிய தேசியக்கட்சி கிராம உறுப்பினர்கள் எம்முடன் கோபமாக உள்ளனர். மறுபடியும் நாங்கள் நடுத்தெருவில் விடப்படுவோமா? எப்பொழுது நாங்கள் கூறும் அரசாங்கத்தை அமைப்போம்? இந்த அரசை எப்பொழுது கவிழ்ப்போம்? இது நடைபெறும் காரியமா?"



இப்பொழுது ஜே.வி.பி அங்கத்தவர்கள் இப்படிக் கேள்வி எழுப்புகிறார்கள்.

எங்களின் பாதயாத்திரைகள் முடிவடைந்துள்ளன. வேலைநிறுத்தங்களும் முடிவுற்றது. இதைப் பற்றி அரசாங்கம் அலட்டிக் கொள்ளவில்லை.ஆனால் அரசாங்கம் நாளுக்கு நாள் பலம் பெற்ற வண்ணம் முன்னேறுகிறது எனவும் அவர்கள் சிந்திக்கிறார்கள். சனாதிபதி ஓய்வூதியம் பெறப்போகிறார். அதாவது ஓய்வு பெறப்போகிறார். ஆனால் அவரது சகோதரர் அனுராபண்டாரநாயக்கா மக்களுக்குப் பலபல கதைகளைக் கூறித்திரிகிறார்.

**தினமின பத்திரிகையில்**
**ரகுமன் எழுதியது**
**மொழியாக்கம்:- சக்திவேல்**


"இம்முறை அரசுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டும். ஒருவரும் கவலைப்பட வேண்டாம். மக்களைக் கொழும்புக்கு வரவழைத்து அரசாங்கத்தைப் பயமுறுத்துவோம். என்னால் முடிந்ததை நான் செய்யத் துணிவாக உள்ளேன். ஆயிரக்கணக்கில் எமது ஆதரவாளர்களைக் கொழும்புக்கு வரவழைத்து எமது கட்சியின் பலத்தைக் காண்பிப்போம். அதற்குப் பிறகு சனாதிபதி அரசாங்கத்தைக் கலைத்து விடுவார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமைப் பீடத்தை அகற்றி எமக்கு ஆதரவானவர்களைத் திரட்டிக் கட்சியின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றுவேன்" என அனுராபண்டார நாயக்கா பகல் கனவுடன் நித்திரை கொள்கின்றார்.

இந்நாட்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மேடைப் பேச்சுக்கள் மிகச் சுவாரஷ்யமாகவும்,கேலிக்கூத்தாகவும், மேடை நாடகமாகவும் அமைந்துள்ளன. இந்த மேடை நாடகத்தைப் பார்ப்பதற்குக் கட்சி பேதமின்றி ஆயிரக்கணக்கில் மக்கள் பங்கு கொள்கின்றனர். இவர்கள் எல்லோரும் தமது ஆதரவாளர்கள் என நினைத்து மேடையில் வாய்க்கு வந்ததை சு.க.வினர் பேசி வருகின்றனர். ஜே.வி.பி மட்டுமே பாதயாத்திரை செய்து வருகின்றது. கொழும்புக்கு வரும் மக்கள் கூட்டத்தைப் பார்த்து ஜே.வி.பியினர் பயப்பட வேண்டும். அரசாங்கமும் பயந்து நடுங்க வேண்டும் என சு.க.வினர் நினைக்கின்றனர். இப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்கள் சிலர் என்ன செய்வோம் என்று பைத்தியம் பிடித்து அலைகின்றனர். ஜே.வி.பியினர் பாதயாத்திரையைச் சிறிமாவோவின் தேர்தல் தொகுதி ஊடாக நடத்தினர். அதுவும் அனுராபண்டாரநாயக்கவின் அனுசரணையோடு. காரணம் அரசாங்கத்தைப் பயமுறுத்துவதற்கு அல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனை கலமக்களைப் பயமுறுத்துவதே ஆகும். இந்தப் பாதயாத்திரையை ஜே.வி.பியினர் அரசியல் சாணக்கியத்தோடு வென்றுவிட்டனர். இதனால் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்த முடியாது. காரணம் அரசாங்கம் இந்தப் பாதயாத்திரைகளுக்கு வழிகளைத் தாராளமாகத்திறந்து விட்டிருக்கிறது. வாகனங்களை நிறுத்திப் பாதயாத்திரைகளுக்குப் பூரண ஒத்துழைப்பைத் தந்துள்ளது. ஆனபடியால் வழி நெடுகிலும் தொண்டை கிழியக் கத்திக்கொண்டு பின் கொழும்பு நகருக்குச் சென்று ஆதரவாளர்கள் பஸ் வண்டிகளில் ஏறி வீடுகளுக்கு ஓடுகின்றனர். இதை ஜே.வி.பியினர் வழமையாகச் செய்து வருகின்றனர்.

அரசாங்கம் சமஷ்டி அமைப்பைப் பற்றித் தெளிவான சிங்களத்தில் மக்களுக்குக் கூறுவதற்குத் தயங்குகின்றது. இதனால் வடகிழக்கிற்கு என்ன ஆட்சியைக் கொடுக்கப் போகின்றார்கள் என்று சிங்கள மக்களுக்குச் சரிவரத் தெரியாது. இன்று ஜே.வி.பியினர் பாதயாத்திரைகள்,வேலை நிறுத்தங்கள், மேடைப்பேச்சுக்கள் ஆரம்பித்து 1987 ஆம் 1988 ஆம் ஆண்டுகளின் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மக்கிக் கிடங்குகளை ஞாபகப்படுத்துவதற்கே ஆகும். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தமது செயற்பாடுகளினால் பைத்தியக்காரர்களாக மாற்றி ஜே.வி.பியில் இணைந்து கொள்ளும் வழியைத் திறந்து வைத்து இருக்கின்றது. சனாதிபதி அவர்கள் அரசியலைத் தற்பொழுது நன்றாகப் புரிந்து கொண்டுள்ளார். ஜே.வி.பியுடன் வடகிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும்,அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கும் தந்திரோபாயத்தைப் பாவித்துக்கொண்டு வருகிறார். தற்பொழுது ஆட்சி மாற்றத்தையும்,சர்வதேச உதவிகளையும் நிராகரிப்பதற்கு அவர் ஆயத்தமாக இல்லை. ஆகையால் ஜே.வி.பியினரைக் கட்சியில் சேர்க்காமல், வெளியிலிருந்து அவர்களின் ஆதரவைப் பெற்று ஐக்கியதேசிய முன்னணி பாராளுமன்ற அங்கத்தவர்கள் சிலரைத் தமது கட்சிக்குள் இழுத்து அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதே அவரின் திட்டமாகும்.

சனாதிபதிக்குப் பாராளுமன்றத்தைக் கலைக்க முடியும், ரணில் விக்கிரமசிங்கவை வீட்டுக்கு அனுப்ப முடியும், கருஜயசூரியவைப் பிரதமராக்க முடியும், என்றெல்லாம் அவரின் சகோதரர் அனுராபண்டாரநாயக்கா கூறிவருகிறார்.

சாதாரணமாக எமது நாட்டில் வழமையாக ஆட்சியாளர்களே சகல சண்டித்தனங்களையும் நடத்துவார்கள். ஆனால் இப்பொழுது அது தலைகீழாக மாறி,எதிர்க்கட்சியினர் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள், பாதயாத்திரைகள்,ஊர்வலங்கள் என்பவற்றைச் செய்து வருகின்றனர். அரசாங்கத்தைக் கெட்ட வார்த்தைகளால் தூசிக்கின்றனர். இவைகளை எல்லாம் அரசாங்கம் மௌனமாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறது. நாட்டில் அடுத்த சனாதிபதியாக வரவிரும்பும், ஒருவர் சனாதிபதியின் ஆசீர்வாதத்தோடு இவைகளைப் புரிந்து வருகிறார். மக்களால் ஐந்து வருட ஆட்சி புரிவதற்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசைக் கவிழ்ப்போம் என்று பகிரங்கமாகக் கூறிவருகின்றனர்.



தற்பொழுது அனுராபண்டார நாயக்கவும்,மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆயிரக்கணக்கில் மக்களைக் கொழும்புக்கு வரவழைத்து ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என நினைக்கின்றார்கள். சிலர் அடுத்த பாராளுமன்றத்திற்குச் செல்லவும் ஆட்சி நடத்துவதற்கும் புதிய உடுப்புகளும் எடுத்துவிட்டனர். அவர்கள் புதிதாக அமைக்கப்போகும் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகள் பெறலாம் என நம்புபவர்களாகும். இவர்கள் வடகிழக்கில் உள்ள பிரச்சினைகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாதவர்கள்,மங்கள சமரவீர பாணந்துறையில் நடந்த கூட்டத்தில் ஜே.வி.பியும்,பொதுசன ஐக்கிய முன்னணியும் சேர்ந்து அமைக்கப்போகும் அரசில் விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவோம் என்று கூறியுள்ளனர். இதுவே தற்பொழுது சிங்கள மக்களுக்குக் கூறியுள்ள பதிலாகும். அனுராபண்டாரநாயக்கவின் கதைகளினால் விடுதலைப் புலிகள் மயங்கி அவர்களும் மலர் மாலைகள் அணிவிக்கப்போகின்றார்கள் என மங்கள சமரவீர நினைத்துக்கொண்டுள்ளார்.சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி இணைந்து அமைக்கப்போகும் அரசு விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு முன்வந்தால் நோர்வே இந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை தடைசெய்ய வேண்டும். அவர்களை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும். சமஷ்டி முறையில் மிகக் குறைவான அதிகாரம் விடுதலைப்புலிகளுக்கு கொடுக்கப்படும் என்று ஒரு கற்பனை உலகத்தில் பறந்து திரிகின்றனர்.

எதிர்க்கட்சியின் இந்த புதிய ஆலோசனை ஜே.வி.பி கூட்டு ஒப்பந்தம் முறிவடைந்த பின் வந்துள்ளது.

வடகிழக்கிற்கு கொடுக்கப் போகும் சமஷ்டி அதிகாரங்கள். எப்படி இருக்கும் என்பதில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதால் எந்தத் தீர்வும் காணாமல் கூட்டு ஒப்பந்தம் முறிவடைந்தது.

ஜே.வி.பி யினர் நினைப்பது போல் சனாதிபதி அவர்கள் அரசியல் யாப்பை மாற்றியமைக்கத் தயாராக இல்லை. அவர் வடகிழக்கு பிரச்சினைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கே விருப்பம் தெரிவித்து வருகிறார். இதனால் ஜே.வி.பி சு.க கூட்டு சாத்தியமாகாது. ஐக்கிய தேசிய முன்னணி அரசை கவிழ்த்துவிட்டு தனது கட்சியின் கொள்கைகளை ஈடுவைக்க விரும்பமாட்டார். சனாதிபதியின்கட்டளைகளை மீறி தற்பொழுது ஜே.வி.பியினர் கொழும்பில் கூட்டங்களை நடத்திவருவதால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதை சனாதிபதி தற்பொழுது உணர்ந்துள்ளார். இதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப்பதவி சந்திரிக்கா அம்மையாரின் கைகளிலிருந்து மெதுவாக நழுவிய வண்ணம் உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சிலர் தலைமைப்பதவி சனாதிபதியிடம் இருப்பதை விரும்பவில்லை. மக்களைக் கொழும்புக்கு வரவழைத்து புதிய அரசொன்று அமைக்கப் போகின்றோம் என்று மேடைகளில் பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருவது சனாதிபதியை இன்னும் படுமோசமான அரசியல் பின்னடைவிற்கு தள்ளியவண்ணம் உள்ளது.

புதிய அரசு அமைப்பதாக இருந்தால், அரசாங்கத்தில் 18 வாக்குகளை பெற்றுக் கொள்ள வேண்டும். இதை அவரால் செய்ய முடியாது. அப்படி ஏற்பட்டாலும் அது ஒரு தற்காலிகமான அரசாங்கமாகவே செயற்படும் இது சனாதிபதிக்கு நன்றாகத்தெரியும். இவர்களைப் பார்த்துத் தான் தனது நிறைவேற்று அதிகாரத்தை பாவிக்காமல் மௌனமாக இருக்கின்றார்.

சிறிலங்கா சுதந்திர கட்சி சில தலைவர்களுக்கு இது புரியாது. அவர்களுக்கு எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும். சனாதிபதியை அல்லது தமது கட்சி ஆதரவாளர்களை பலி கொடுத்தாவது ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு தயாராகி வருகின்றார்கள். அதனால் சனாதிபதியின் நிலை இருதலைக் கொள்ளி எறும்பாக உள்ளது.

□ □ □ □

## பிரதமர் ரணில் பகிரங்க மன்னிப்பு கேட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீள் பரிசீலனை

**-ஐ.நா.உரை தொடர்பாக பொ.ஐ.முன்னணி**

(கொழும்பு)

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதலை நியாயப்படுத்திப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ.நா.சபையின் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரை தொடர்பில் பாராளுமன்றத்தில் அவருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டு வரும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி, ஐ.நா.உரை தொடர்பில் பிரதமர் பகிரங்க மன்னிப்புக் கேட்பாரானால், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் மீள் பரிசீலனையொன்றைச் செய்ய முடியுமென அறிவித்திருக்கின்றது.

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வெள்ளியன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இந்த அறிவித்தலை விடுத்துள்ள பொதுசன ஐக்கிய முன்னணியின் பேச்சாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான சரத் அமுனுகம கூறியுள்ளார்.

இந்த வாரம் நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இந்தப் பிரேரணை சம்பந்தமாக அறிவுறுத்தி, சபையில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் திகதி தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டங்களில் கலந்துகொண்ட பிரதமர்,தீவிரவாதத்திற்கெதிரான உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொள்ளாமல் ஏன் பகிஸ்கரித்தார்? என்பதை அவர் விளக்க வேண்டும்.

அத்துடன் அமெரிக்க சனாதிபதியின் செய்தி பரிமாற்றுபவராக செயற்பட்டதன் காரணமாகவே அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர நேரிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## செப்ரெம்பரில் 5281 பேர் சிகிச்சை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் கடந்த மாதம் 5281 நோயாளர் சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலையின் கடந்த மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையானது விபரமாகத் தெரிவிக்கையில், வெளிநோயாளர் பிரிவில் 3587 பேரும், சாதாரண காய்ச்சலினால் 834 பேரும், சிரங்குக்காக 463 பேரும், குருதிச் சோகையினால்242பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 72 பேரும் வயிற்றோட்டத்தினால் 10 பேரும் சிறு சத்திரசிகிச்சைக்காக 12 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் மேற்படி நோயாளர்களில் 07 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் சாதாரண காய்ச்சலினால் 63 குழந்தைகளும், சிரங்குக்காக 15 குழந்தைகளும்,குருதிச்சோகையினால் 09 குழந்தைகளும் சிகிச்சை பெற்றுள்ள இதேவேளை 1 தொடக்கம் 05 அகவைக்குட்பட்ட சிறார்களில் சாதாரண காய்ச்சலினால் 312 சிறார்களும் சிரங்கினால் 95 சிறார்களும்,குருதிச்சோகையினால் 42 சிறார்களும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் மேற்படி வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதியில் மகப்பேற்றுக்காக 40 கர்ப்பிணித் தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு அதில் 40 சிசுப் பிறப்பு நிகழ்ந்துள்ளதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

(ஆ)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடிநீர் வழங்கல்!

## -நோயாளர் பெரும் அசௌகரியம்

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவிவருவதன் காரணத்தினால் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் முதல் பணிபுரியும் ஊழியர்கள் வரை தினம் தினம் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருகின்றமையினை காணக்கூடிய தாகவுள்ளது.**

மாவட்ட வைத்தியசாலையில் உள்ள திருந்தவெளிக் கிணற்று நீர் வற்றியுள்ளமையின் காரணமாக வைத்தியசாலை தேவைக்கேற்ற அளவு நீரினைப் பெற்றுக்கொள்ள முடியாது வைத்தியசாலை ஊழியர்கள் சிரமங்களை எதிர் கொள்வதனை நேரில் காணக்கூடியதாகவுள்ளது.


ஏற்பட்டுள்ளமையின் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே குடிநீர் விநியோகம் தற்போது இடம் பெற்று வருவதனைக் காணக்கூடிய தாகவுள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலை வளாகத்தினுள் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், விடுதிகளில் தங்கியிருக்க முடிகின்றது.

பாரிய இடநெருக்கடிகளுக்கு மத்தியில் இம் மாவட்ட வைத்திய சாலை நோயாளர் விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை மேற் கொண்டுவரும் நோயாளர்களாகிய எங்களுக்கு தேவைக்கேற்ற தண்ணீரினைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ள



நீர்வற்றிய கிணறு



நீர்த்தொட்டி

பலத்த சிரமங்களுக்கு மத்தியில் திருந்தவெளிக்கிணற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட குடி நீரினை பெற்றுக்கொள்ளக் கூடிய சூழ்நிலை

ருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள், காலைக்கடன்களை நிறைவேற்றுவதற்கு போதிய நீர்வசதியின்றி அல்லல் படுவதனை அவதா

தேயென அங்கு தங்கியிருந்து சிகிச்சை மேற்கொண்டுவரும் நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (சோ)

# யோகபுரத்தில் மாணவருக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் நிதியுதவியுடன் தமிழீழ விளையாட்டுத் துறையின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மூன்று நாள் விளையாட்டு பயிற்சிப் பட்டறை இடம் பெற்று வருகிறது.

மு/யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் மாவட்ட இளைஞர் சேவைகள் மன்ற செயலர் சண்முகவடிவேல் தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்தப் பயிற்சிப் பட்டறை ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து முதல் நாள் தமிழீழ விளையாட்டுக் குழுத் தலைவர் ஆசிரியர் பத்மநாதன் கலந்து கொண்டு விளையாட்டு பயிற்சி சம்பந்தமான கருத்துக்களை வழங்கினார். அத்தோடு பாரதிநகர் கிராம சேவையாளர் சண்முகநாதனும் கருத்துரை வழங்கினார். இன்று நடைபெறும் இறுதி நாள் பயிற்சிப் பட்டறை நிகழ்வின் இறுதியில் இதில் பங்கு கொண்ட மாணவர்களுக்கு அதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

(24,26)

# மின் கம்பங்கள் உடைத்து கம்பிகள் அபகரிப்பு!

(செட்டிகுளம்)

செட்டிகுளம்,பூவரசன்குளம் பகுதியில் உள்ள மின் கம்பிகள் மின் கம்பங்கள் என்பன அறுத்தும் உடைத்தும் கொண்டு செல்லப்படுகின்றன. நீண்ட நாட்களாக இந்தச் சம்பவம் இடம் பெறுகின்ற போதிலும் மின்சார சபை அதிகாரிகள் கண்டும் காணாததைப் போன்று உள்ளனர்.

தற்போது இந்த மின் கம்பங்களின் ஊடாக மின் விநியோகம் நடைபெறுவது இல்லை. இதனை பயன்படுத்திக் கொள்ளும் நபர்கள் பல கம்பங்களில் சீமெந்து பகுதியினை உடைத்து உள்ளே உள்ள கம்பிகளினை எடுத்து செல்கின்றனர். அத்துடன் மின் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் அலுமினியக் கம்பி பலமீற்றர் வரையில் அறுத்து செல்லப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் எஞ்சியுள்ள வையும் இல்லாமல் போகும் என்பதில் ஐயம் இல்லை. (21)

# 3 இலட்சம் உல்லாசப் பயணிகள் இவ்வருடம் சிறிலங்கா வருகை

இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களிலும் மூன்று இலட்சத்துக்குமதிகமான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர் என்று சிறிலங்கா உல்லாசப் பிரயாண சபை தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் இதே காலப் பகுதியில் இலங்கைக்குவந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் தொகையுடன் ஒப்பிடுகையில் இது 23 சத வீதம் அதிகமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளைப் போன்று சீனா, இந்தியா, ஜப்பான்,பாகிஸ்தான் ஆகிய ஆசிய நாடுகளிலிருந்தும் இலங்கைக்குப் பெருமளவிலான உல்லாசப் பிரயாணிகள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானமே இத்தகைய அதிகரிப்புக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கடற்படை கெடுபிடியினால் கேறபலி மீனவர்கள் பாதிப்பு

கடற்படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளால் கச்சாய் பெரியமாவடி கெற்பலிப் பிரதேச வாழ் மீனவர்கள் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருவதாக இப்பிரதேச மீனவர் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

1995ஆம் ஆண்டில் இருந்து இப் பகுதி மீனவர்களுக்கு சொந்தமான பல லட்சக்கணக்கான உடமைகளைச் சேதப்படுத்தியுள்ளதுடன்

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் இயல்பான தொழிலுக்குப் பாதுகாப்பு வலயம் பாஸ் நடைமுறை என்பவற்றைத் திணித்து வருவதால் இவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி துன்பப்பட்டு வருகின்றனர்.

எனவே இந்நிலை தொடர்ந்தால் வெகுசன போராட்டங்களில் தாம் ஈடுபட முடிவு செய்துள்ளதாகவும் அப்பகுதி வாழ் மக்கள் தெரிவிக்கின்றனர். (33)

# டெங்குக் காய்ச்சலுக்கு மாத்தளையில் ஒருவர் பலி

மாத்தளையில் தீவிரமாகப் பரவிவரும் டெங்குக் காய்ச்சலினால் இதுவரை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது கடந்த வருடம் இருந்ததைவிடப் பாதிப்புக் குறைவானதாக இருக்கின்ற போதும் தொற்று நோய் அபாயம் நிலவுவதால் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவும் அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (32)

# கடற்படை, விமானப்படை அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு

சிறிலங்கா கடற்படை மற்றும் விமானப்படைகளில் 55 வயது பூர்த்தியடைந்த அதிகாரிகளின் சேவைக் காலத்தை நீடிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன உத்தரவு பிறப்பித்துள்ளார். இதன்படி கடற்படை ரியல் அட்மிரல், கப்டன்தர அதிகாரிகளும், விமானப்படை எயார் வைஸ் மார்சல் கப்டன்தர அதிகாரிகளும் 55 வயதைக் கடந்த பின்பும் சேவை புரிவதற்கு, சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்துள்ளது.

# ஓய்வூதியர்களின் 20 வருட பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்க வழி செய்யப்படும்

## -அமைச்சர் வஜிர அபயவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பின் போது ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதிய கொடுப்பனவு முரண்பாட்டை தீர்ப்பதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். இதன் மூலம் சுமார் 3 லட்சத்து 70ஆயிரம் பேர் நன்மையடைவார்களென கூறியுள்ளார்.

கடந்த 20 வருடங்களாக ஓய்வூதியம் பெறுவோர் இதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும் இவற்றைத் தீர்க்கும் நோக்குடன் தான் அமைச்சரவையில் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்ததாகவும் அதனை நிதியமைச்சு ஆராய்ந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# சு.க-ஜே.வி.பி.கூட்டுக்குஇனிமேல் வாய்ப்பில்லை இனவாத சக்திகளுக்கு அநுரா இரையாகிவிட்டார்

## சுனேத்திரா பண்டாரநாயக்கா கவலை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையே கூட்டணியை ஏற்படுத்துவதற்கு இடமே இல்லையென சந்திரிகாவின் சகோதரியும் சுனேர மன்றத்தின் தலைவியுமான சுனேத்திரா பண்டாரநாயக்கா கூறியுள்ளார்.

இரு கட்சிகளுக்குமிடையே கூட்டமைப்பொன்றைஏற்படுத்துவது தொடர்பாக சனாதிபதி மேற்கொண்டுள்ள நடவடிக்கை சரியானதெனஅவர் மேலும் கூறியுள்ளார். ராவய பத்திரிகைக்கு அவர் பேட்டியளிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் இனவாத சக்திகளுக்கு அனுராபண்டாரநாயக்க இரையாகிவிட்டார் எனக் கூறியுள்ளார்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கலே உரிய தீர்வு எனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ள போதிலும் ஜே.வி.பி.அதனை நிராகரித்துவிட்டதென அவர் மேலும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஜே.வி.பிக்கு ஐந்து அமைச்சுப் பதவிகளைக் கொடுத்தாலும் பரவாயில்லை. ஒரு கூட்டமைப்பை அமைக்க வேண்டும் என பொ.ஐ.மு பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்வதில் பல முரண்பாடுகள் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது . (32)

# புலிகளின் நகல் திட்டத்தை சமர்ப்பித்ததும் மாற்றுத் திட்டமொன்றை மு.கா.கையளிக்கும்

## - வீடமைப்பு பிரதியமைச்சர் அறிவிப்பு

வடக்-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக புலிகளினால் திட்டநகல் சமர்ப்பிக்கப்பட்டபின்னர் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பான மாற்று திட்டமொன்றை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சமர்ப்பிக்கவுள்ளதாக கட்சியின் தவிசாளரும் வீடமைப்பு பிரதியமைச்சருமான பசீர்சேகு தாவுத் தெரிவித்துள்ளார்.

புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை யோசனைகளில் அவர்கள் முஸ்லிம்கள் தொடர்பாக குறிப்பிடவுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டே வட-கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் பற்றிய புலிகளின் நிலையை அறியமுடியுமென அவர் மேலும் கூறியுள்ளார். காத்தான் குடியில் நேற்று முன்தினம் நடைபெற்றஅபிவிருத்தி பெருவிழா வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# 3 கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கப் போராட்டம்

மூன்று கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் 21 ஆம் திகதிஇந்த அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்படவுள்ளது.

தொழில் சட்டத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றம் அரச உடமைகளைத் தனியார் மயமாக்கல்,சம்பள உயர்வு ஆகிய மூன்று விடயங்கள் தொடர்பாகவே இந்த அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பலாத்காரம் செய்ய கடற்படையினர் முயற்சி ஊர் மக்கள் கூடியதால் தாக்குதல்!

## -மாதகல் பகுதியில் சம்பவம்

மாதகல் புக்கபிலோ பகுதியில் கடந்த வெள்ளியன்று இரவு 9.30 மணியளவில் தமது வீட்டு வாசலில் இருந்த பெண் ஒருவர் கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் தற்போது சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இரவில் சிவில் உடையில் வந்தஇரு கடற்படைச் சிப்பாய்கள் அந்தப் பெண்ணை தூக்கிச் செல்ல முயன்றனர் என்றும்,

ஊர்மக்கள் கூடியதால் அவ்விரு சிப்பாய்களும் பெண்ணைத் தாக்கிவிட்டு தப்பிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் மாதகல் கடற்படை அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து, உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பெண்ணின் வீட்டை நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ளனர்.

# பட்டப்பகலில் வீடு புகுந்து 25 பவுண் நகைகொள்ளை

பகல்வேளையில் வீட்டின் கூரையைப் பிரித்துக் கொண்டு வீட்டினுள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த 25பவுண் எடையுள்ள நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவம் நுணாவில் தாளையடி அம்மன்கோவில் அருகிலுள்ள இரண்டாம் ஒழுங்கையில் நடைபெற்றுள்ளது.

மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தில் பணிபுரியும் எஸ். கனகசபை என்பவரது வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் எவரும் இல்லாத நேரம் பார்த்து இந்தத் திருட்டு நடைபெற்றுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோவை ஐ.நா.செயலாளர் பதவிக்கு போட்டியிட நியமிப்பதென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அடுத்துவரும் சந்தர்ப்பத்தில் ஆசியாவைச் சேர்ந்த ஒருவருக்கே சந்தர்ப்பம் அதிகம் என்பதால் டிரோன் பெர்ணாண்டோவின் பெயர் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் கூறியுள்ளார்.


# கேள்வி அறிவித்தல்

முல்லைத்தீவு நகர தாழ் மின்னழுத்த மின்சார விநியோகத்திற்காக இரண்டு எண்ணிக்கையுடைய 100 கே.வி.ஏ./3 அவத்தை /440 வோல்ற்று/50 அதிர்வுகள் கொண்ட டீசல் எரிபொருளினால் இயங்கக்கூடிய மின்பிறப்பாக்கிகளுக்கான கேள்விகள், உற்பத்தியாளர்கள் /விநியோகத்தர்கள் /ஏற்றுக்கொள்ளப்பட்ட முகவர்கள் ஆகியோரிடமிருந்து கோரப்படுகின்றது. மேற்குறித்த சேவைக்கு கேள்வி மீளளிப்பு வைப்புப்பணமாக ரூபா 24,000/=உம் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 750/=உம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக்கிளையில் 23.10.2003 காலை 10.00 மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளலாம்.

2. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 31.10.2003 அன்று முற்பகல் 10.00 மணிக்கு முன் பதிவுத்தபாலில் கிடைக்கக்கூடியதாகவோ அன்றி முல்லைத்தீவு கச்சேரியில் அதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டியிலோ இடலாம். கேள்விப்பத்திர வலது பக்க மேல் மூலையில் "100கே.வி.ஏ. மின்பிறப்பாக்கிகள் இரண்டிற்கான வழங்கல்கள்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் 31.10.2003 அன்றைய தினமே பிற்பகல் 3.00 மணியளவில் திறக்கப்படும். இக் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோரியோர்களோ அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

4. முன்னர் இக்கேள்வி அறிவித்தலுக்கு விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் தற்போதைய கேள்விக்கான விண்ணப்பங்களை தீர்வை கட்டணங்களுமின்றி அனுப்பலாம்.

திருமதி. இமல்டா சுகுமார்
(தலைவர் கேள்விச்சபை)
அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-8292)


# 4ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 02 - 07 - 1975 வீரச்சாவு 13 - 10 - 1999

(எல்லைப்படை மாவீரர்)
**வீரவேங்கை யோகன்**
கதிர்காமு யோகராசா



பிறப்பு 12 - 10 - 1973 வீரச்சாவு 10 - 11 - 1999

**கப்டன் - தவம்**
கதிர்காமு - தவராசா

**கோவில் வயல் இயக்கச்சி**

புன்னகையாய் கண்ணெதிரே
நின்றீர்கள்
புயலெழுந்த மாதிரியாய்
சென்றீர்கள்
ஓயாத அலையெனவே
எழுந்தீர்கள்

ஒருமாத இடைவெளியில்
விழுந்தீர்கள்
விழுந்தாலும் அலையாக எழுந்தீர்கள் - எங்கள்
நெஞ்சங்களில் நிலையாக
நிமிர்ந்தீர்கள்.

முகவரி:-
சுண்டிக்குளம் வீதி
புன்னைநீராவி,
விசுவமடு.

(3822)

குடும்பத்தினர்

# 31ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
**யாக்கோப்பு இராயப்பு**

மண்ணுலகில் 10.02.1936 | விண்ணுலகில் 13.09.2003

ஆரத்தழுவி ஆறுதல் மொழிகூறி
சீராக எம்மைத் தழுவி சிந்தை மகிழவைத்து
பாரினிலே எம்மைப் பண்புடனே வாழவைத்து
நேயமுடன் எம் நினைவில் என்றும் நிலைத்திருக்கும்
பாசமிகு அப்பாவே
உங்களைப்பிரிந்து ஒரு மாதமல்ல ஒரு யுகந்தான் கழிந்தாலும்
உங்கள் நினைவலைகள் என்றென்றும் மறந்திடாது.

உங்கள் நினைவுகளுடன்

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மாமி,சகோதர சகோதரிகள்.

இல.106,பாலிநகர்,
வவுனிக்குளம்.

(2933)

# மூன்றாம்ஆண்டின்நினைவில்

தாய்க்கு முத்தாக 17 . 02 . 1976



தமிழுக்கு வித்தாக 13 . 10 . 2000

**தலைமைக் காவலர் சிவதர்சினி**
**சிவஞானம் சிவதர்சினி**
சாந்தி இல்லம் கரவெட்டி யாழ்ப்பாணம்

தாய்க்கு தலைமகளே
தமிழ்த்தாய்க்கு வீரத்திருமகளே
சீர் பல பெற்று சிறப்புடன்
வாழ்வாய் என நினைத்தோம்
இப் பார்போற்ற பறந்து விட்டாயே
தேடுவார் அற்றுத் தெருவில் உன் பாசக் கூட்டமும்
பறவைகள் சீர் குலைந்து தவிக்குதம்மா
காற்றிடை கலந்து கலகலந்த சிரிப்பு தீர்ந்து
தேற்றிட வாராயோ எம் தீந்தமிழே சிவந்தி

த.முகவரி
மேஜர் மங்கை குடியிருப்பு.
மல்லாவி.

(3831)

என்றும் உன் நினைவில் வாடும்
அம்மா, அப்பா,சோதரர்,சோதரியர்

# ஈராண்டு நினைவு அஞ்சலி

இலங்கையில் மலர்ந்தது 22 □ 07 □ 1972



லண்டனில் உதிர்ந்தது 13 □ 10 □ 2001

வன்னி புளியம்பொக்கணையில் வளர்ந்து லண்டன் மாநகரில் வாழ்ந்து அகால மரணம் அடைந்த செல்வன்.

சின்னத்துரை சரஸ்வதி தம்பதிகளின் மூத்தபுதல்வன்

# ஜெயமோகன் (மோகன்)

ஈராண்டு மறைந்தாலும் உன்
முகம் நிழலாடுது இங்கே.
ஈரவிழிகளுடன் உன்செயல்
போராடுது இதயமதில்-உன்னால்
பிரிக்கமுடியாத பெற்றவரை நீ
பிரிந்திருப்பது ஏன்?
அன்பான மைத்துனரை அக்காவை
பாசமான தங்கைமாரை
மறந்திருக்க உன் இதயம் நினைக்குமா?-
இல்லை
பிரியாத பிரிவை நினைக்க இதயம்
எப்படித்தாங்குமடா.

ஆத்மா சாந்தியடைய நாகதம்பிரானைப் பிரார்த்திக்கின்றோம்.

கலவட்டித்திடல்,
புளியம்பொக்கணை,
பரந்தன்.

(3839)

குடும்பத்தினர்.



**சிந்தனைக்கு**

மனித ஆன்மாவின் ஆழமான அபிலாசையாகவே மனிதனிடம் சுதந்திரதாகம் பிறக்கிறது.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 13-10-2003

# சட்டவிரோத ஆயுதங்கள்

சிறிலங்காவில் தற்பொழுது 30 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாக சிறிலங்காவின் உள்துறை அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார். அத்துடன் 35 ஆயிரம் தப்பி ஓடிய படையினர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் பாதாள உலகக்குழுவினருடன் இணைந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இச்சட்ட விரோத ஆயுதங்கள் தப்பி ஓடிய படையினர்வசம் மட்டும் இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கதொன்றாகும். அதாவது 1988–89காலப்பகுதியில் ஜே.வி.பி.யினரின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் முதல் பிரதேச தலைவர்கள் வரை பலருக்குப் பதிவுகளின்றியே ஆயுதங்கள் வழங்கப்பட்டன. பின்னர் ஜே.வி.பி. அடக்கப்பட்டபின் அவை ஆட்சியில் நீடித்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாலும் பெறப்படவில்லை. தொடர்ந்த பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியினராலும் பெற முடியவில்லை. பதிலாக இந்த ஆயுதங்களிலிருந்து பாதுகாப்புத்தேடிக் கொள்ள தமது அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆயுதங்கள் வழங்கினர்.

இந்த ஆயுதங்களை ஒப்படைக்க கால அவகாசங்களும் பொதுமன்னிப்புக் காலங்களும் வழங்கப்பட்டபோதும் பயன்பெரிதாகக் கிட்டிவிடவில்லை. ஏனெனில் அந்த ஆயுதங்களின் தேவை அரசியல்வாதிகளுக்குத் தொடர்ந்தும் இருக்கக்கூடியவகையில் சூழ்நிலை இருந்ததாகும். ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிக்காலத்தை வன்முறைக் கலாச்சாரம் நிலவிய காலம் என வர்ணித்தவர்கள் இறுதியில் சனாதிபதி சந்திரிகாவை "சேலைகட்டிய பிரேமதாசா" என வர்ணிக்கும் அளவுக்கு நிலைமைகள் இருந்தன.

சாதாரணமாகவே வன்முறைகள், குற்றச் செயல்கள் மலிந்திருந்தனவாயின் சந்திரிகா பெருமை பேசும் -அவர் வெற்றியீட்டியஆறுதேர்தல்களும் வன்முறைகள் மத்தியிலேயேஇடம் பெற்றன. இவற்றின் உச்சக்கட்டமாக வடமேல் மாகாண சபைத் தேர்தல் வன்முறைகள் இருந்தன. இறுதியில் நடத்திய தேர்தலில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே கொலைக்குற்றவாளியாகினார். அவர் தனது விருப்பு வாக்குகளைக் கூட்டிக் கொள்ளத்தமது கட்சிக்காரர்கள் மீதே வன்முறைகளைப் பிரயோகித்த பெருமையும் மிக்கவர்.

இப்பொழுது வாராந்தம் பாதயாத்திரைகளை நடத்திவரும் ஜே.வி.பி.யுடன் கால்நடையாகத்திரியும் சு.க.வினர் தமது ஆட்சிக்கெதிராக நடத்தப்பட்ட ஊர்வலங்கள்மீது சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரைக்கொண்டு தாக்குதல் நடாத்தினர் இவ்வாறான நிலையில் அரசியலில் ஆளும் கட்சியில் இருந்தாலென்ன எதிர்க் கட்சியிலிருந்தாலென்ன அனைவருக்கும் ஆயுதங்கள் தேவைப்பட்டன.

இதனைவிட பாதாள உலகக் குழுவினருக்கும் படையில் இருந்து தப்பிஓடி இவர்களுடன் இணைந்து கொண்டவர்களுக்கும் இவ் அரசியல்வாதிகளே தொழிலும் வழங்கினர் அதாவது தேர்தல் வன்முறைகளில் பாதாளக் குழுக்களை வாடகைக்கு அமர்த்தி வன்முறைகளை நடாத்தியமையால் தமது தொழிலுக்கு அத்தியாவசியமான துப்பாக்கிகளைக் கைவிட அவர்கள் தயாராக இருக்கவில்லை.

இதேபோல தப்பிஓடி தலைமறைவாகியுள்ள படையினருக்கும் தாம் தப்பி ஓடியபோது எடுத்துச் சென்ற துப்பாக்கிகளே வாழ்க்கைச் செலவிற்கான வருவாயை ஈட்டிக் கொடுக்கும் மூலதனமாக இருந்தது. தொழில் வாய்ப்பு இன்றி இருந்த இளைஞர்கள் தொழில் வழங்கும் ஒரே அமைப்பாக இருந்த இராணுவத்தில் இணைந்து யுத்தத்துக்குத் தாக்குப் பிடிக்க முடியாது தலைமறைவாகியிருந்த வேளையில் அரசாங்கம் நடத்திய "எலிவேட்டைக்கு" தப்பவும் இந்த ஆயுதங்களே அவர்களுக்கு உதவியது.

ஆகமொத்தத்தில் இந்த ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் எவ்வகையிலும் அவற்றை விட்டுவிடத் தயாராக இல்லை. எனவே அந்த ஆயுதங்கள் சிறிலங்காவில் அரசியல் வன்முறைகளுக்கும் ஏனைய குற்றச் செயல்களுக்கும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டே வரப்போகின்றன.

இவற்றைக் களைய பதவிக்கு வரும் அரசாங்கங்கள் எடுக்கும் முயற்சிகளும் நேர்மையானதாக இருப்பதில்லை. அதாவது ஆளும் கட்சியினரிடம் இருக்கும் ஆயுதங்களை விடுத்து எதிர்க்கட்சியினரிடமிருக்கும் ஆயுதங்களைக் களையவே இவர்கள் முயல்வார்கள். அத்துடன் ஆளும் கட்சிப் பாதாள உலகத்தவரை அரவணைத்து எதிர்க்கட்சி ஆதரவுப் பாதாள உலகத்தவரை அழித்தொழிப்பதே அவர்களின் குற்றச்செயல்களுக்கு எதிரான நடவடிக்கையாகும்.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் கவனத்திற் கொள்ளவேண்டும். ஆளும் கட்சியினர் நடத்தும் வன்முறைகளுக்கு சட்டவிரோத ஆயுதங்கள் தான் தேவையென்பதல்ல. ஏனெனில் கடந்த 22 வருடகால தேர்தல்களை எடுத்துப் பார்த்தால் சட்டபூர்வமான படைகளின் சட்ட பூர்வ ஆயுதங்களின் துணையுடனேயே வன்முறைகள், தேர்தல் முறைகேடுகள் நடத்தப்பட்டமையை காண்கொள்ள முடியும். அதாவது யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தலுடன் தொடங்கிய கதை இன்னமும் தொடர்கிறது என்றே கூறலாம்.

# வரவு-செலவுத் திட்டத்தை தோற்கடிக்க பொதுசன ஐக்கிய முன்னணி தீவிர முயற்சி

## -சனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

நிதியமைச்சரினால் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளவரவு-செலவுதிட்டத் தீர்மானத்தை தோல்வியடையச் செய்ய அல்லது ஏற்றுக்கொள்வதைத் தடுக்க பொ.ஐ.மு. தீவிர முயற்சியும் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதற்காக பல அரச எம்.பி.களினதும் சிறுபான்மைக் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவதற்கு தற்போதிருந்து பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளதாகவும் மேற்படி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்பார்க்கப்படும் ஆதரவு கிடைக்காவிட்டால் வாக்கெடுப்பின்போது உள்ளேயும் வெளியேயும் பலத்த ஆர்ப்பாட்டங்களை நடத்தி தீர்மானம் ஏற்றுக்கொள்வது தடை செய்யப்படும் எனவும் அதன் மூலம் அரசின் ஸ்திரத்தன்மையை இல்லாது செய்து சனாதிபதியினால் ஆளும் கட்சியின் உயர் பதவியை மாற்றுவதற்கு உபாயம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

வரவு- செலவுத் திட்டம் மீதான இரண்டாவது வாக்கெடுப்பு நடைபெறும் வேளையில் நாடு முழுவதும் தீவிர எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவும் பிரச்சாரம் செய்யவும் இப்போதே ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக இந்தியாவின் பிரபல பிரச்சாரவாதியின் உதவியும் கோரப்பட்டுள்ளது எனவும் 'லங்கா தீப' தெரிவிக்கிறது.

# பணிநீக்கப்பட்ட துறைமுக ஊழியர்களை வேலைக்கு அமர்த்தாவிடில் மீண்டும் போராட்டம்

## எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ச

மதிய உணவு இடைவேளை நேரத்தில் தொழிற் சங்க கூட்டு முன்னணியால் கடந்த 7ம் திகதி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்ட துறைமுக ஊழியர்கள் 19 பேரையும் மீண்டும் வேலைக்கு அமர்த்தாவிட்டால் மீண்டும் பாரிய எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் கடந்த 10ம் திகதி நடைபெற்ற ஊடகத்துறையினரின் சந்திப்பின் போது இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அரச கூட்டுத்தாபன தனியார் துறையைச் சேர்ந்த ஊழியர்கள் கடந்த ஏழாம் திகதி தமது வேலைத் தளத்தில் மதிய உணவு இடைவேளையின் போது உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டதால் 19ஊழியர்கள் பணிஇடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொழிற்சங்க விதிமுறைகளையும் அடிப்படை மனித உரிமைகளையும் மீறுகின்ற செயல் என ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இப் போராட்டத்தில் துறைமுக அதிகார சபை ஊழியர் சுமார் 10 ஆயிரம் பேர் பங்கு பற்றியதாகவும் இவர்களில் 19 பேர் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பள அதிகரிப்புக் கோரியும் தொழிலாளர்களின் உரிமைகளை குறைப்பதற்கு எதிராகவும் மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் 44 வீத பங்குகள் தனியாருக்கு விற்பனை

(கொழும்பு)

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொச) 44 வீத பங்குகளைத்தனியாருக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத் தலைவர் லால் குமாரதுங்கா தெரிவித்தார்.

இந்தப் பங்குகள் 68 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதற்கான ஒப்பந்த நகலும் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்தாக முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

# பாதாள உலக குழுவொன்றின் முக்கிய புள்ளி கிரிக்கெட் சபை நிதியில் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

பாதாள உலகக்குழுவின் பிரதான கூலிப்படை உறுப்பினர் எனக் கருதப்படும் தம்மிக்க அமரசிங்கவை போலிக் கடவுச்சீட்டின் மூலம் இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு சிறிலங்கா கிரிக்கெட் சபைத் தலைவரான திலங்க சுமதிபால ஒழுங்குபடுத்திக் கொடுத்ததாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் டபா மகிந்த என்பவரின் வாக்கு மூலம் தெரிவிக்கிறது.

1999ஆம் ஆண்டு மேற்படி அமரசிங்க என்ற பாதாளக்குழு உறுப்பினரை தமது தம்பியின் பிறப்புச் சான்றிதழையும் தேசிய அடையாளஅட்டையையும் பயன்படுத்திகிரிக்கெட் சபையின் நிதி மூலம்அவர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளா தகவலை சந்தேக நபர் வெளியிட்டுள்ளார்.

இதற்காக 170,651 ரூபாவுக்கான பயணிகள் காசோலை வழங்கப்பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.இதன் காரணமாக தற்போது சிறிலங்கா கிரிக்கெட் சபையின்தலைவரானதிலங்க சுமதிபால விரைவில் கைது செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது.

# 1-வது டெஸ்ட்போட்டி சமநிலையில் முடிவு ராவிட் ஆட்ட நாயகனாக தெரிவானார்

இந்திய -நியூசிலாந்து அணிகளுக்கிடையே அகமதாபாத்தில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.


வெற்றிபெற 370 ஓட்டங்கள் என்ற இலக்கோடு இறுதி நாளான நேற்று துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆட்ட நேர முடிவில் 6 விக்கட்டுக்களை இழந்து 272ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணியின் மெக்மிலன் 93 ஓட்டங்களுடனும் நாதன் ஆஸ்லே 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். முதல்நாள் எண்ணிக்கையான 1 விக்கட் இழப்பிற்கு 48 என்ற நிலையில் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து ஆரம்பத்தில் விரைவில் விக்கட்டுக்களை இழந்தாலும் 7ஆவது விக்கட் ஜோடியான நாதன் ஆஸ்லே மெக்மிலன் இணை சிறப்பாக விளையாடி ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய வீரர்களான அனில் கும்ளே 4 விக்கட்டுக்களையும் ஹர்பஜன்சிங் 2 விக்கட்டுக்களையும் 2ஆவது இனிங்சில் வீழ்த்தினர்.

முதல் இனிங்சில் 222 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் அரைச்சதமும் பெற்ற இந்திய அணியின் பிரதித் தலைவர் ராகுல் திராவிட் ஆட்டநாயகனாக அறிவிக்கப்பட்டார். ஸ்கோர் விபரம் இந்தியா முதல் இனிங்ஸ் 5 விக்கட் இழப்புக்கு 500 ஓட்டங்களில் (ஆட்டத்தை நிறுத்தியதாக அறிவித்தது) நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸ் 340 ஓட்டங்களால் இந்தியா இரண்டாவது இனிங்ஸில் 209 க்கு 6 (ஆட்டம் நிறுத்தியது) நியூசிலாந்து- 272-6.

## சேப்பாக்கத்தில் முதல் போட்டி

இந்தியாவுக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.சென்னை சேப்பாக்கம் சிதம்பரம் மைதானத்தில் இந்த கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி பகல் இரவுஆட்டமாக நடைபெறும் இந்தியா பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டிகளுக்கு அடுத்தபடியாக இந்தியா- நியூசிலாந்துப் போட்டிகள் மிகுந்த ஆர்வமளிப்பதால் நேற்று அதிகாலை முதலே நுழைவுச்சீட்டைக்காக வரிசைகளில் நிற்பதாக இளம் கிரிக்கெட் ரசிகர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.



# தற்கொலைக் கார்க் குண்டுத்தாக்குதலில்

# ஈராக்கில் 10 பேர் பலி, பலர் காயம்

ஈராக் தலைநகரம் பாக்தாத்தில் விடுதி ஒன்றுக்கு அண்மையில் நேற்று இடம்பெற்றதற்கொலைக் குண்டுத்தாக்குதலில் குறைந்தது 10பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

ஈராக்கிய நேரம் இரவு 12.45 மணிக்குஇத்தாக்குதல் நடத்தப் பட்டிருக்கிறது. இந்தக் குண்டுத் தாக்குதல் நடைபெற்ற இடத்திற்கு அண்மையில் அமெரிக்க படை நிலைஒன்று உள்ளதாகவும் விடுதியில் அமெரிக்காவால் நியமிக்கப்பட்ட 25பேரைக் கொண்ட இடைக்கால நிர்வாகசபையின் உறுப்பினர்கள் சிலர் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வேகமாக வந்த கார் ஒன்று விடுதிக்கு முன்னாலுள்ளதடுப்புச் சுவரை மோதியதும் குண்டுவெடிக்க வைக்கப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

கால்மைல் தூரத்துக்கு அப்பாலிருந்த விடுதி ஜன்னல்கள் குண்டு வெடிப்பினால் உடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.



## லெப். கேணல் விக்டர் நினைவாக உதைபந்தாட்டப் போட்டி

(மன்னார்)

மூத்த தளபதி லெப்.கேணல் விக்டரின் 17ஆம் ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று நிறைவடைந்துள்ளது.

மன்னார் பொது மைதானத்தில் போட்டிகள் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றன.

நேற்று மாலை நடைபெற்ற நிறைவு நிகழ்வில் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக்கொடியை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி லக்ஷ்மன் ஏற்றி வைத்தார். முதன்மைச்சுடரினை தமிழீழ விளையாட் டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்தார். லெப். கேணல் விக்டர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரினை அவரது தந்தையார் ஏற்றிவைத்தார். மலர் மாலையினை மன்னார் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் மூர்த்தி, மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. மாவீரர் லெப். கேணல் விக்டர் நினைவாக வெற்றிக்கேடயத்தை பனங்கட்டிட்கொட்டு புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் சுவீகரித்துக்கொண்டது. (மி)

## 'கியூடெக்' நிறுவனத்தினரால் இலைக்கஞ்சி வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

மனித முன்னேற்ற நிலையம் (கியூடெக்) நிறுவனத்தின் அனுசரணையுடன் பளைப் பகுதியில் இயங்கிவரும் அரச பாடசாலை மாணவர்களுக்கும், முன்பள்ளிச் சிறார்களுக்கும் சத்துணவு இலைக் கஞ்சி வழங்கப்பட்டுவருகிறது.

பளைப் பகுதியிலுள்ள 13 அரச பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கும், அங்குள்ள முன்பள்ளிச் சிறார்களுக்குமே மேற்படி நிறுவனத்தினரால் இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி நிறுவனத்தினரால் கரைச்சி/கண்டாவளைப் பிரதேச அரச பாடசாலைகள் மற்றும் முன்பள்ளிகளுக்கு சத்துணவு இலைக் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### சங்கிலித்..

அமைச்சர் திலக் மாரப்பன கடந்த வாரம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். இதன்படி தரை, கடல், ஆகாயப்படை மேஜர் ஜெனரல் தரத்தையும் அதற்குச் சமமான தரத்தையும் உடையவர்களினது பதவிக்காலத்தை 55 வயதுக்கு மேலும் நீடிக்க முடியும்.

கடந்த வருடம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனவை இராணுவத் தளபதியாக நியமிக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குச் சிபார்சு செய்திருந்தார். ஆனால் சனாதிபதி லயனல் பலகல்லவுக்கு ஒரு வருட காலம் பதவி நீடிப்பு வழங்கியதன் மூலம் நிராகரித்திருந்தார். இதன் காரணமாக லொகான் குணவர்த்தன மேஜர் ஜெனரல் தரத்தில் மூன்று ஆண்டுகள் சேவையில் நீடித்ததால் ஓய்வுபெறும் நிலைக்குத் தள்ளப் பட்டார். ஆனால் அமைச்சர் திலக் மாரப்பன வர்த்த மானி அறிவித்தல் மூலம் 55 வயது வரை பதவி வகிக்கக்கூடிய வகையில் லொகான் குணவர்த்தனவை இராணுவத் தலைமை அதிகாரி பதவியில் நீடிக்க வழி செய்திருந்தார். இவ்வருட நவம்பர் மாதம் 22ஆம் திகதியுடன் லொகான் குணவர்த்தன 55 வயதை அடைவதால் இராணுவத் தளபதி பதவிகிட்டாது ஓய்வு பெறும் நிலையை அடைந்ததை அடுத்து அவரது பதவிக் காலத்தை நீடிக்கக்கூடிய வகையில் புதிய வர்த்தமானி அறிவித்தல் வந்து ள்ளது. இவருக்கு அடுத்த நிலை யிலுள்ள சாந்தகொட்டகொடபிரதி இராணுவத் தலைமை அதிகாரியாக கடந்த வாரம் பொறுப் பேற்றுக் கொண்டார். இவர் அடுத்த வருடம் நவம்பர் மாதம் ஓய்வுபெறும் வயதை அடைகிறார்.

### சு.க.வின்..

மீட்டிருந்த போதும் அந்தத் திட்டத்தை மாற்றிக்கொண்டு தேசப் பற்றாளர் முன்னணியுடன் இணைந்து போராட்டம் நடத்த சந்திரிகா முடிவு செய்தார் எனினும் ஜே.வி.பி. இப் போராட்டத்தில் இணைவதில்லை என முடிவு செய்துள்ளதாக இப்பொழுது தெரியவந்துள்ளது. இதேவேளை கொழும்பில் நடத்தவுள்ள அரச எதிர்ப்புப் பேரணி மாவட்ட ரீதியாகத் தொடர்ந்து நடத்தப்படும் எனவும் அம்பாறையில் இம்மாதம் 31ஆம் திகதியும், குருநாகலில் நவம்பர் 14ஆம் திகதியும், இரத்தினபுரியில் நவம்பர் 21ஆம் திகதியும், அநுராதபுரத்தில் டிசம்பர் 12ஆம் திகதியும் போராட்டங்கள் நடைபெறும் எனவும் அறிய வந்துள்ளது.

### வீரவணக்கம்..

கூளாங்குளம் த.மு.தரணிக்குளம் சாத்திரிகுளம், என்ற போராளியே சாவடைந்தவராவார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### பத்திரிகை...

இதற்கு உண்மையான காரணம் ராணுவத்தின் இந்த கொலைவெறி ஆட்டத்தை பத்திரிகைநிருபர்கள் படம்பிடித்து நடைபெற்ற உண்மை சம்பவத்தை வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தி விடுவார்கள்என்ற கபட நோக்கத்துடனேயே பத்திரிகையாளர் மீது தாக்குதலை மேற்கொண்டது. எனவே இந்த சனநாயக உரிமை மீறல் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவங்கள் இன்று நேற்றுமட்டுமல்ல. மாணிப்பாய் நெல்லியடி எனத் தொடர்ந்து செல்கின்றது. ராணுவவெறியர்கள் நினைப்பது போன்று பத்திரிகையாளர்களையோ மக்களையோ தாக்குவதன் ஊடாக மக்களின் விடுதலை உணர்வெழுச்சியை மழுங்கடிக்க முடியாது என சிறிலங்கா படையினரால் நான்கு பத்திரிகையாளர் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்து சர்வதேச தமிழீழமாணவர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### த.யு.க...

வுக்கழகத்தின் திருமலை மாவட்ட செயற்பிட்ட அதிகாரி கலைவர்ணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கிராமம் முற்றாக மக்கள் இடம் பெயர்ந்ததுடன் அங்கிருந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள்,75 உழவு இயந்திரங்கள், ஆறு அரிசி ஆலைகள் என்பன முற்றாக அழிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (25)

### தேர்தலில்..

இணைந்து போட்டியிட்டு இதுவரை பல உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது. இதனையடுத்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும், மலையக மக்கள் முன்னணியினரையும் ஒன்றிணைத்து தேர்தலில் போட்டியிடுவதற்கு நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம் முயற்சிகளை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### யாழ்...

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரசை வற்புறுத்த வேண்டும் மற்றும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரையும், யாழ் பிராந்திய இராணுவத் தளபதியையும் உடனடியாக இடம் மாற்றுவதற்கு அரசிற்கு கண்காணிப்புக்குழு அழுத்தம் கொடுக்க வேண்டும். நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தில் செய்தியாளர்களை இனம் கண்ட பின்பும் தாக்குதல் நடத்தியமை தொடர்பாக பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும், செய்தியாளர்கள் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் கலந்து கொள்ளும் சந்திப்பிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென நான்கு கோரிக்கைகள் உள்ளிட்ட மகஜர் ஒன்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் செய்தியாளர்களினால்கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரியாலைப்...

கருத்துத் தெரிவிக்கும்போது:

தான் யாழ். நகரப்பகுதியில் வர்ணம்பூசும் வேலையில் ஈடுபட்டதாகவும், இரவு 10.00 மணிக்குப் பின்னர் அப்பகுதியில் அமைதி நிலவுவதாக கூறப்பட்டதைத் தொடர்ந்து தனது வீட்டிற்குச் செல்வதற்காக சென்றவேளை மாம்பழச் சந்தியில் தன்னைப் பிடித்த படையினரும், பொலிசாரும் அப்பகுதியிலுள்ள இராணுவ காவலரன் ஒன்றினுள் தன்னைக் கொண்டுசென்று கை மற்றும் கால்களைக் கட்டிய பின்னர் உடல் முழுவதும் மிக மோசமாக தாக்கியதாகவும், பின்னர் தங்களை நள்ளிரவு யாழ். பொலிசாரிடம் கையளித்ததாகக் கூறியுள்ளார். பின்னர் பொலிஸ் நிலையத்தில் வைத்து மேற்படி மோதல் சம்பவங்களின் போது தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டி நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்ததாக அவர் மேலும் கூறியுள்ளார். இவர் தலையில் அடி காயங்களும், கால் ஒன்றும் முறிந்த நிலையில் உடல் எங்கும் அடிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். தான் மிக மோசமாக படையினராலும், பொலிசாராலும் கண்மூடித்தனமாக தாக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை அரியாலையைச் சேர்ந்த மற்றுமோர் இளைஞரான தயனிகரன் (வயது-21) கருத்துத் தெரிவிக்கையில்:

தான் கடற் தொழிலுக்காகச் சென்று சம்பளம் பெறும் தாமதத்தினால் இரவு 10.00 மணியளவில் அரியாலையிலுள்ள தனது வீடு நோக்கி சென்றவேளை தன்னை மறித்த படையினர் தன்னை கண்மூடித்தனமாக தாக்கியதுடன், மாம்பழச் சந்தியிலுள்ள படையினரது முகாமிற்கு அழைத்துச் சென்று தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டதுடன் பொலிசாரும், படையினரும் கண்மூடித்தனமாக தாக்கியபின்னர் யாழ். பொலிசாரிடம் கையளிக்கப்பட்ட தான் இச்சம்பவத்துடன் தொடர்புடையதாக குற்றம் சாட்டப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (27)

### ஊடக..

ஈடுபட்டிருந்த பத்திரிகையாளர்கள் சார்பில் வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கதிர்காமத்தம்பி மற்றும் ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம் ஆகிய இருவரும் பேசியுள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தின் போது சர்வதேச கண்காணிப்புக் குழுவினரது வாகனத்தின் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதுடன் கண்காணிப்புக் குழுவிற்குக் கூட பாதுகாப்பு உத்தரவாதம் அற்ற நிலையில் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பாக எவ்வாறு செயற்பட முடியுமென ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அதாவது தமது வாகனம் அடித்து நொருக்கப்பட்டமை, பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் மற்றும் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்பாக தாங்கள் உரிய நடவடிக்கை களை மேற்கொண்டுள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பாக தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தமையைத் தொடர்ந்து பதினொரு மணியுடன் மறியல் போராட்டம் நிறைவடைந்தது. (27)


கிளிநொச்சி நகரப்பகுதிக்கு புதிதாக வழங்கப்படவுள்ள தொலைபேசி இணைப்புக்களிலிருந்து ....

இரணைமடுச்சந்திக்கும், பரந்தன் சந்திக்கும் இடையில் தொலைத் தொடர்பு நிலையங்களை நடாத்த விரும்புவோர் தமது பதிவுகளை,

வன்னியன் தொலைத்தொடர்பு நிலையம்,
வைத்தியசாலை முன்பாக,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

எனும் முகவரியில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(3845)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.